# அவசர கூட்டப்பொருள்கள்

1. நாகர்கோவில் நகராட்சியில் செயல்பட்டு வரும் பல்வேறு அடிப்படை சேவைகளில் ஒன்றான தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல் காரணமாக மின் பயனீட்டு செலவினம் மொத்த நிர்வாக செலவினத்தில் கணிசமான அளவில் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு மின் பயன்பாட்டினை குறைக்கும் விதமாகவும் அதன் செலவினஙகளை குறைக்கும் விதமாகவும் நகராட்சியிலுள்ள அனைத்து தெரு விளக்குகளையும் குறைந்த மின்சாரம் கொண்டு செயல்பட கூடிய ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED) மாற்றி அமைத்திட முடிவு செய்யப்பட்டது. அதற்கான அறிவிப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 29.08.2016 அன்று விதி எண். 110–ன் கீழ் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக அரசாணை எண். 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள்.29.04.2017–ல் நிர்வாக அனுமதி வழஙகி உத்தரவிடப்பட்டு வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் மேலான தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இந்த அரசாணையின்படி இந்நகராட்சியிலுள்ள அனைத்து வகையான தெரு விளக்குகளையும் குறைந்த மின்சாரத்தில் செயல்படக்கூடிய ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED Lights) மாற்றி அமைக்கவும் இதற்குரிய செலவினத்தை 100% தனியார் முதலீட்டுடன் அமைத்து அவர்கள் மூலமாகவே இயக்கி பராமரித்திடவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் தெருவிளக்குகளை திறம்பட ஒளிர் உமிழ் விளக்குகளாக உரிய மின் சேமிப்பு சாதஙகளை கொண்டு அமைத்திட கீழ்கண்ட விதிமுறைகளை கடைபிடித்திடவும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நகராட்சியில் தற்போது உள்ள தெருவிளக்கு கட்டமைப்புகளை உரிய முறையில் ஆய்வு செய்து தற்போதைய தன்மை அறிந்து அதற்கேற்ப மாற்றி அமைத்திட வேண்டிய ஒளிர் உமிழ் விளக்குகளின் தன்மையை நிர்ணயித்து அவற்றிற்காகும் செலவினை கணக்கிட்டு செலவு தொகையினை மீளப்பெறும் திட்டக் காலத்தை கணக்கீட்டு உரிய திட்ட வரைவுகளை தயாரித்து வழஙகிட " மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை" நியமித்தல்.
2. மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக மற்றும் மண்டல நிர்வாக இயக்குனரக தொழில்நுட்ப குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் திட்ட வரைவின் அடிப்படையில் தகுதியான மின் சேமிப்பு நிறுவனத்தின் மூலம் திட்டத்தினை செயல்படுத்திடவேண்டி தகுதியான மின் சேமிப்பு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து பட்டியல்படுத்துவதற்கான நடைமுறைகளை கடைபிடித்தல்.
3. மின் சேமிப்பு கணக்கீட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் திட்ட வரைவு அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி வரைவு தயார் செய்து அவற்றினை பட்டியல்படுத்தி தகுதியான மின் சேமிப்பு நிறுவனஙகளிடம் வழஙகி ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய மின் சேமிப்பு நிறுவனத்தாரை / முதலீட்டாளரை / தெருவிளக்குகள் அமைத்து பராமரிப்பவர்களை

தேர்வு செய்து ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்க்கொண்டு பராமரிக்கவும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தகாரர் தெரு விளக்கு கட்டமைப்புகளை ஒளிர் உமிழ் விளக்குகளுடன் இயக்கி பராமரிப்பதன் மூலம் ஏற்படுகின்ற மின் சேமிப்பு அதன் பொருட்டு எதிர்பார்க்கப்படும் மின் கட்டண சேமிப்பு ( அடிப்படை ஆண்டில் மின் கட்டண தொகையை கொண்டு கணக்கிடவேண்டும்) சம்மந்தப்பட்ட முதலீட்டாளர்களுக்கு திட்டக்காலம் முழுவதும் வழஙகப்படும். இந்த அரசாணையின் படி மேற்கூறிய பத்தி (1) –ல் குறிப்பிட்டவாறு மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை நியமித்து திட்ட வரைவு தயாரிப்பதற்கான செலவின தொகையை திட்ட மதிப்பீட்டில் 2% மிகாமல் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் பத்தி (1) –ல் குறிப்பிட்டவாறு மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை (Investment Grade Audit Agency) நியமித்திடவும் பத்தி (2) –ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதியான மின் சேமிப்பு நிறுவனஙகளை கண்டறிந்து பட்டியலிடவும் அவ்வாறு பட்டியலிடப்பட்டவர்க்கு மேற்படி நகராட்சி தெருவிளக்கு கட்டமைப்புகளில் உரிய மின் சேமிப்பு சாதனத்தினை பொருத்தி ஒளிர் மின் விளக்குகளை அமைத்து இயக்கி பராமரித்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இறுதி வடிவாக்கம் செய்து தகுதியான 100% முதலீடு செய்யக்கூடிய மின் சேமிப்பு நிறுவனஙகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் வரை தேவையான நடவடிக்கைகளை மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் / மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அஙகீகாரம் அளித்திடவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.23484/2010/இ4

**தீர்மான எண்: 555 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் மைதானத்தில் சர்க்கஸ் / பொருட்காட்சி / மேளாக்கள் தொடர்புடைய நிகழ்ச்சிகள் நடத்திட தற்போது நடைமுறையில் உள்ள மைதான கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதால் மைதானத்தில் நிகழ்ச்சிகள் நடத்திட பொது ஏலம் விடவும் அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் அஙகீகாரத்திற்கு.

கோப்பு எண். 26072/2012/அ14

**தீர்மான எண்: 556 – அங்கீகரிக்கப்பட்டது**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 32, சர். சி. பி ராமசாமி அய்யர் நினைவு பூஙகா அருகில் நகராட்சிக்கு சொந்தமான புல எண் 1382/829, கொண்ட இடத்தில் 3640 சதுர அடி உள்ள காலியிடத்தில் வரிவிதிப்பு எண் 2004152, மேலாளர், பாரத் பெட்ரோலியம் நிறுவனத்திற்கு குத்தகை உரிமம் விடப்பட்டு குத்தகை உரிமம் 31–03–2015 –ல் முடிவடைந்து இது நாள் வரை நகராட்சியால் உரிமம் புதுப்பித்து வழஙகப்படவில்லை. மேலும் மேற்படி இடத்தின் 31–03–2015 முடிய மாத வாடகை ரூ.9893/– ஆகும்.

மேலும் மேற்படி இடமானது குறுகிய வளைவில் இருப்பதினால் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக இருந்து வரும் காரணத்தினாலும், அண்ணா பேருந்து நிலையத்திற்கு அதிகளவு பேருந்துகள் செல்வதினாலும், கன்னியாகுமரிக்கு பேருந்துக்கள் அதிகளவு இவ்வழியாக செல்வதாலும் அடிக்கடி மேற்படி இடத்தில் விபத்துக்கள் ஏற்படுகிறது.

எனவே விபத்தினை தடுத்திடும் பொருட்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு செய்திடவும், பொது மக்கள் நலன் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வரும் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தினை நகராட்சி கையகபடுத்திடவும், மேற்படி சாலையோரத்தை நகராட்சி பூங்காவுடன் சேர்த்து பராமரிப்பு செய்திடவும், மேலும் மேற்படி நிறுவனத்திற்கு குத்தகை உரிமம் ஏதாவது வழஙகப்பட்டிருந்தாலும் அவற்றை ரத்து செய்து அன்னார் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நாளது தேதி வரையிலான குத்தகை உரிமத்தொகை, சேவை வரி மற்றும் தொழில்வரி அந்நிறுவனத்திடமிருந்து ஈடு செய்திடவும், இழப்புகள் ஏற்படும் நேர்வில் சட்டபூர்வமாக வசூல் செய்திட நடவடிக்கை தொடர்ந்திடவும் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பாரத் பெட்ரோலிய நிறுவனத்தை காலிசெய்து பொது மக்கள் நலன்கருதி சாலை வசதி மேம்படுத்தலாம்.

மேலும் அருகில் உள்ள வாடகை கார் நிறுத்தும் இடத்தையும் நகராட்சி வசம் கொண்டு வரலாம்.

கோப்பு எண். 12965/2007/அ13

**தீர்மான எண்: 557 – அங்கீகரிக்கப்பட்டது**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கமாக அமைந்துள்ள (18 &11) 198 ச.அடி உள்ள கடையினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான விளம்பர செலவினத்திற்கும் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 5350/2008/அ13

**தீர்மான எண்: 558 – அங்கீகரிக்கப்பட்டது**

5. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூந்து நிலையம், வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்து நிலையம் மற்றும் வடசேரி ஆம்னி பேரூந்து நிலையஙகளிலுள்ள கட்டண / இலவச கழிவறைகளை பொது மக்கள் இலவசமாக பயன்படுத்திடும் பொருட்டு கழிவறைகளை இலவசமாக பராமரித்திடவும், பேரூந்து நிலைய வளாகத்தினை 24 மணி நேரமும் சுகாதாரமாக பராமரித்திடவும் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவி சமூக விரோத செயல்கள் நடக்காவண்ணம் கண்காணித்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நகராட்சிக்கு செலவினமில்லாமல் மேற்கண்ட பணிகளை செய்யும் பொருட்டு பேரூந்து நிலைய வளாகத்தினுள் (ம) பூஙகாவிற்குள் விளம்பரம் செய்திடும் உரிமம் பொது ஏலம் விட மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 6972/2017/அ14

**தீர்மான எண்: 559 – அங்கீகரிக்கப்பட்டது**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய பூங்கா வாடகை கார் நிலையத்தில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் **01.04.2015** முதல் **31.03.2018** முடிய திரு.ற்றி. ராஜன், **235**, பெரிய விளை, நாகர்கோவில் என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேற்படி இனத்திற்கு கீழ்கண்டவிபரப்படி கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வருடம் | தொகை ரூ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 2015–16 | 20,300/– |
| 2 | 2016–17 | 21,315/– |
| 3 | 2017–18 | 22,381/– |

மேற்படி இடத்தில் வாகன காப்பகம் அமைந்துள்ளதால் பொது மக்கள் (ம) போக்குவரத்திற்கு அதிக இடையூறுகள் ஏற்படுவதால், அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகிறது.

எனவே, மேற்படி வாகன காப்பகத்திற்கு வழஙகப்பட்ட உரிமத்தினை **2015–2016 –**ம் ஆண்டு பொது ஏல அறிக்கை பொது நிபந்தனை எண். **37–**ன் படி பொதுமக்கள் நலனுக்காக மேற்படி உரிமத்தினை ரத்து செய்து அவ்விடத்தினை பூஙகாவுடன் நகராட்சியால் இணைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் உரிமம் ரத்து செய்யப்படும் நாள் வரையிலான வாடகையினை ஈடு செய்துவிட்டு எஞ்சிய தொகையினை மேற்படியாரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை / காலஙகடந்த வைப்பு தொகையிலிருந்து மீள திரும்ப வழஙகிடவும், ஏல அறிக்கையிலிருந்து மேற்படி உரிம இனத்தினை நிரந்தரமாக நீக்கிடவும் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 21003/2014/அ14

**தீர்மான எண்: 560 – அங்கீகரிக்கப்பட்டது**

7. நகர் மன்ற தீர்மான எண் 305, நாள் 28-02-2017-ல் வடசேரி கனகமூலம் சந்தையில் புதிய 260 கடைகயையும், பொறுப்புத் தொகை ரூ1.00 இலட்சம் நிர்ணயம் செய்து மாத வாடகை அடிப்படையில் ஏலம் விடவும், ஏலம் உறுதி செய்யப்பட்டதும் 12 மாத வாடகை முன் பணமாகவும், ரூ 20000/- மின் கட்டண பொறுப்புத் தொகையாக பெற்றிடவும், மன்ற அனுமதி பெறப்பட்டிருந்தது.

தற்பொழுது கனகமூலம் சந்தையில் விவசாய விளை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனை ஊர்ஜிதம் செய்திடும் விதமாக புதியதாக கட்டப்பட்டுள்ள 260 கடைகளையும் ஒரே தொகுப்பாக ரூ 18720000/- பொறுப்பு தொகையாக நிர்ணயம் செய்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், ஏலம் உறுதி செய்யப்பட்டதும் 12 மாத ஏல தொகையினை முன் பணமாக செலுத்திடவும், மேலும் விளம்பர செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி சந்தை கடைகளின் ஏலத்திற்கு தயார் செய்யப்பட்ட பிரத்யேக நிபந்தனைகளுக்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 04023/2017/அ13

**தீர்மான எண்: 561 – அங்கீகரிக்கப்பட்டது**

8. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் டீ கடை பக்கம் அமைந்துள்ள (11.7 x 10) 117 சதுர அடி கொண்ட 4 அறைகள் மற்றும் (11.6 x 7.4) 86 சதுர அடி கொண்ட ஒரு அறை ஆம்னி பேருந்து நிலைய முகவர்கள் மட்டும் கலந்து கொண்டு ஆம்னி போக்கு வரத்து டிக்கட் முன்பதிவு அறையாக செயல்படவும், ஆம்னி பேருந்து நிலைய வளாகத்தில் ஆணையரால் ஒதுக்கீடு செய்யப்படும் இடத்தில் ஒரு ATM மையம் அமைப்பதற்கான குத்தகை உரிமம் (வங்கிகளுக்கு வைப்பு தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து) ஏல பொறுப்பு தொகை ரூ 2.00 இலட்சம் என நிர்ணயம் செய்வதுடன் வங்கிகள் உட்பட அனைத்து இனங்களுக்கும் ஏலம் உறுதி செய்யப்பட்டதும் ஒரு வருட வாடகை கூடுதல் வைப்பு தொகையாகவும், ரூ 10000/- மின் கட்டண வைப்பு தொகையாகவும் நிர்ணயித்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான விளம்பர செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 5350/2008/அ13

**தீர்மான எண்: 562 – அங்கீகரிக்கப்பட்டது**